DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No. 530/2024
Deposition of Witness for L.W.14 / P.W.5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அ.வேல்முருகன் | | | |
| Father's/ Husband's Name | : | அங்கப்பன் | Occupation | : | தலைமை காவலர் |
| Village | : | | | | |
| District | : | ஈரோடு | Age | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19**.06.2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஈரோடு வடக்கு காவல் நிலையத்தில் தனி பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21/5/2023 ஆம் தேதி காலை 10 மணிக்கு வடக்கு காவல் நிலையத்தில் நிலைய அலுவலலில் இருந்த போது கஸ்தூரி க/பெ. சுந்தரம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரனை பெற்று வடக்கு காவல் நிலைய குற்ற எண் 250 / 23 சட்ட பிரிவுகள் 279 , 337 இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது முதல் தகவல் அறிக்கையின் அசல் , நகல் மற்றும் வாதியின் புகார் மற்றும் இன்டிமேசன் ஆகியவற்றை இணைத்து கணம் நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு சபியுல்லா பார்வைக்கு வைக்கப்பட்டதுற்படி **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மபந்தமாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரிதரப்புகுறுக்குவிசாரணை:**

இந்த வழக்கின் புகார் மனுவினை யார் எழுதினார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது குறித்து புகார்தாரரிடம் நான் விசாரணை செய்யவில்லை. அவர் அளித்த புகார் மனுவை வாங்கி அப்படியே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விட்டேன் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்னவாறு புகார் மனு பெறப்படவில்லை

முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்படடவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கத்திற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல .

மறுவிசாரணை: இல்லை.

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.